சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :06.02.2025

வா.சா.1 – மாணிக்கம் S/o நாச்சான்

O.S No.225/2021 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நானும், இவ்வழக்கின் பிரதிவாதி அய்யம்மாளும் வெவ்வேறு ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் கச்சிராயன்பட்டி கிராமம், ஒத்தம்பட்டி கிராமத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். நான் கச்சிராயன்பட்டி கிராமத்தில் ஊராட்சிமன்ற தலைவராக 2 முறை இருந்துள்ளேன். நான் மேலூரில் வெங்கடேஷ் நகரில் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் போது குடியிருந்தேன். சினேகலதா என்ற நபர் வெங்கடேஷ் நகரில் என் வீட்டருகே குடியிருந்துர். அவர் மூலமாக பிரதிவாதி எனக்கு அறிமுகம். நான் வெங்கடேஷ் நகரில் 12 ஆண்டுகாலம் குடியிருந்தேன். சினேகலதா எவ்வளவு நாட்கள் அங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது, ஆனால் அவர் நான் இருந்தபோதெல்லாம் இருந்தார். பிரதிவாதி அய்யம்மாள் எதற்காக என்னிடம் பணம் கடனாக கேட்டார் என்றால் குடும்ப செலவிற்காகவும் மகன் வெளிநாடு செல்வதற்காகவும் தேவைப்படுவதாக என்னிடம் தெரிவித்தார். பிரதிவாதி அய்யம்மாளை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதி கணவர் இறந்த விதவையாவார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. முதல் தவணையில்நான் அய்யம்மாளுக்கு 2 லட்சம் ரூபாய் கொடுத்தாக கூறுகிறேன் என்றால்சரிதான். என்னுடைய வெங்கடேஷ் நகரில் இருந்த வீட்டில் 2 லட்சம் ரூபாயை

அய்யம்மாளும் அவருடன் வந்த எனக்கு அறிமுகம் இல்லாத பெண் ஒருவர் உடன் வந்திருந்தார் அவர் முன்னிலையில் கொடுத்தேன். 2 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்ட போது அய்யம்மாள் என்னிடம் ஒரு கடனுறுதி சீட்டும், 12.05.2012 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசலையும் கொடுத்து 2 லட்சம் ரூபாய் வாங்கிசென்று மீண்டும் 3 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார். 06.08.2018அன்று 2 லட்சம் ரூபாய் கொடுத்தேன். 10.09.2018 அன்று 3 லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டேன். 06.08.2018அன்றே 5 லட்சம் ரூபாய்க்கும் சேர்த்து கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டு, அதை தான் 5 லட்சம் ரூபாய்க்காக எழுதியதாக குறிப்பிடுகிறார். 06.08.2018 அன்றே 5 லட்சம் ரூபாய்க்கு நான் கடனுறுதி சீட்டு எழுதி வாங்கவில்லை என்றும்,நான் வழக்கிற்காக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10.09.2018அன்று வா.சா.ஆ.1 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நல்லுச்சாமி, இளவரசு ஆகியோர் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு சொந்த ஊர் கள்ளம்பட்டி ஆகும். நல்லுச்சாமி, இளவரசு ஆகியோர் எனக்கு நண்பர்கள் என்றால் சரிதான். இளவரசு என்பவர் என்னுடன் சேர்ந்து நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரியல்ல நீதிமன்றத்திற்கு வந்தார் எதார்த்தமாக அவரை சந்தித்தேன். இளவரசு பிரதிவாதியின் மீது பணம் கொடுக்கவேண்டி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 12.04.2017 அன்று கடன் பிரதிவாதி இளவரசுவிடம் வாங்கியதாக குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும் அந்த விபரம் நன்கு தெரிந்திருந்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இளவரசு, நல்லுச்சாமி ஆகியோர் கூட்டாக சேர்ந்து பிரதிவாதியை ஏமாற்றி

பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்திற்காக அலைக்கழிக்கிறோம் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.06 18:01:56 +0530

**Sub Judge**
**Melur**